



# தினப்புயல்

PIN news

THINAPPUYAL

තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 52

## உலக ஊடக சுதந்திர தரவரிசையில் பின்தங்கிய இலங்கை



உலக ஊடக சுதந்திர தரவரிசையில் இலங்கை 19 இடங்கள் பின்தங்கியுள்ளது. செவ்வாய்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, உலக ஊடக சுதந்திர சுட்டெண்ணில் இலங்கை 146வது இடத்தைப் பெற்றுள்ளது.

உலகில் உள்ள 180 நாடுகளின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதில் நோர்வே முதலிடத்தில் உள்ளது. இரண்டாம் இடம் டென்மார்க்கிற்கும், மூன்றாம் இடம் ஸ்வீடனுக்கும் கிடைத்தது. 2021 ஆம் ஆண்டில், உலக ஊடக சுதந்திர சுட்டெண்ணில் இலங்கை 127 வது இடத்தில் இருந்தது. இலங்கை 2020 இல் 127 வது இடத்திலும், 2019 இல் 126 வது இடத்திலும் 2018 இல் 131 வது இடத்திலும் இருந்தது.

## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த வாரத்தில் மட்டும் 1,102 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்படி, இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் 17,405 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் இந்த காலப்பகுதியில் 8,936 டெங்கு நோயாளர்கள் மாத்திரமே பதிவாகியிருந்ததாகவும், கடந்த வருடத்தை விட இந்த வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த வாரத்தில் அடையாளம் காணப்பட்ட 207 நோயாளர்களில் கொழும்பு மாவட்டத்தில் 121 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 121 பேரும், காலி மாவட்டத்தில் 112 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 103 பேரும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.



## பாடசாலை உபகரணம் வழங்கும் நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் சிறுவர் நிகழ்ச்சிகளும் நேற்று புதன்கிழமை (4) அனஃபா சமூக சேவை நலன்புரி அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருமாகிய ஏ. முஹம்மட் நளீம் தலைமையில் அதன் நிகழ்கால தலைவர் ஏ. நுஸ்மியா மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் சாய்ந்தமருது கமு/கமு/ அல்-ஜலால் வித்தியால மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் - ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதிப் பொருளாளரும் யஹியாகான் குரூப் நிறுவனத்தின் தவிசாளரும் ஹஸ்மியா முகவர் மற்றும் கானு பிரயாண நிறுவனத்தின் தவிசாளருமாகிய ஏ.சீ.யஹியாகான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கொண்டதுடன், கௌரவ அதிதியாக இலங்கை மின்சார சபை அம்பாறை பிராந்திய மின் பொறியியலாளரும் செஸ்டோ நிறுவனத்தின் ஸ்தாபகத் தலைவருமாகிய எம்.ஆர்.எம். பர்ஹான், நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் எம். பீ. நவாஸ் மற்றும் கல்முனை மாநகர சபை உறுப்பினர் நஸ்ரின் முர்ஷித் அமீன், மேலும் அதிதிகளாக கமு/கமு/ அல்- ஜலால் வித்தியாலய அதிபர் எம்.ஐ.எம். ஸைபுதீன், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய உத்தியோகத்தர், சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.சீ. நஜீம், சமுர்த்தி உதவி முகாமையாளர்,ஊடகவியலாளர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



## ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வர முடியாது

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு எதிராக எந்த நேரத்திலும் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வர முடியாது என சட்டத்தரணி கலாநிதி பிரதிபா மஹாநாமஹேவா தெரிவித்துள்ளார்.

விசேட அறிக்கையொன்றை விடுத்துள்ள அவர் மேலும் தெரிவிக்கையில், பதவி நீக்க பிரேரணையை கொண்டு வருவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் கையொப்பமிட வேண்டும்.

ஜனாதிபதிக்கு எதிராக பதவி நீக்க தீர்மானம் கொண்டு வர வேண்டும். பதவி நீக்க பிரேரணையை கொண்டு வருவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் கையெழுத்திட வேண்டும்.

சபாநாயகரிடம் ஒப்படைக்க வேண்டும். சபாநாயகர் திருப்தி அடைய வேண்டும். அது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும்.

இதைத் தவிர ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர முடியாது. ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வரலாம் என நினைப்பது அரசியலமைப்புக்கு முற்றிலும் எதிரானது. சபாநாயகர் அதை ஏற்கவும் முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

# பொது மக்களுக்கு விடுக்கப்பட்ட விஷேட அறிவிப்பு

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் பொதுமக்களுக்கு அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது. கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது இன்று (05) தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கணனி அமைப்பில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாக குறித்த தீர்மானத்தை பொதுமக்களுக்கு அறிவிக்கவுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. கடந்த மே மாதம் 3ஆம் திகதி கணனி அமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக திணைக்களத்தின் செயற்பாடுகள் தடைப்பட்டு நேற்று (04) மீளமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# ஜனாதிபதிக்கு எதிராக முன்னெடுக்கப்படும் எந்த பிரேரணைக்கும் ஆதரவு வழங்கப்படமாட்டாது

ஜனாதிபதிக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எந்தவொரு பிரேரணைக்கும் ஆதரவு வழங்கப்படமாட்டாது என்று அரசாங்க தரப்பில் இருந்து தனி குழுவாக செயற்படும் 11 கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்த கட்சிகளின் பிரதிநிதிகளுக்கிடையில் நேற்று (03) கொழும்பில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார். ஜனாதிபதிக்கு எதிராக எதிர்க்கட்சியினர் முன்னெடுக்கும் நம்பிக்கையில்லா பிரேரணை, எந்தவித அர்த்தமும் அற்றதாகும் என்றும் அவர் தெரிவித்தார்.



# அமெரிக்கத் தூதுவரின் டுவிட்டர் பதிவு

அமைதியான போராட்டக்காரர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஆதரவளிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் தனது டுவிட்டர் கணக்கில், அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு அனைவருக்கும் சுதந்திரம் இருக்க வேண்டும் என அறிவித்துள்ளார்.

இது ஜனநாயகத்தின் அடிப்படை அம்சம் எனவும் இவ்வாறானவர்களை கைது செய்யக்கூடாதுஎனவும்அமெரிக்கதூதுவர்சுட்டிக்காட்டியுள்ளார்.



# சீன தலைநகர் பீஜிங்கில் போக்குவரத்து முடக்கம்

சீனாவை கொரோனா வைரஸ் திணறடித்து வருகிறது. அந்த நாட்டின் வர்த்தக தலைநகரான ஷாங்காயில் கடந்த ஒரு மாத காலமாக தொற்று பரவல் உச்சத்தில் இருந்து வருகிறது. இதனால் அங்கு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த சூழலில் கடந்த 2 வாரங்களாக தலைநகர் பீஜிங்கில் கொரோனா பரவல் வேகமெடுத்து வருகிறது. நேற்று காலையுடன் முடிந்த 24 மணி நேரத்தில் பீஜிங்கில் புதிதாக 53 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இந்த நிலையில் தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்காக பீஜிங்கில் பகுதியளவுக்கு போக்குவரத்து முடக்கப்பட்டுள்ளது. அந்த நகரில் உள்ள 40-க்கும் மேற்பட்ட சுரங்க ரெயில் நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. 158 வழித்தடங்களில் பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளன.

மூடப்பட்டிருக்கும் பெரும்பாலான ரெயில் நிலையங்கள் பீஜிங்கின் சோயாங் மாவட்டத்துக்குட்டவை என தகவல்கள் தெரிவிக்கின்றன. கொரோனா பரவல் காரணமாக பீஜிங்கில் ஏற்கனவே பள்ளி, கல்லூரிகள் மூடப்பட்டுள்ளதோடு, ஹோட்டல்கள் செயற்படவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



# வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள எச்சரிக்கை

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் புத்தளம், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. ஊவா மாகாணத்திலும் ஹம்பாந்தோட்டை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

காங்கேசந்துறையிலிருந்து புத்தளம், கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான ஆழம் குறைந்த மற்றும் ஆழம் கூடிய கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது இன்று மாலையிலிருந்து அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மழை நிலைமை : புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

காற்று : நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு அல்லது தென்மேற்கு திசையிலிருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20-35 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. காங்கேசந்துறையிலிருந்து புத்தளம், கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 45-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கடல் நிலை : காங்கேசந்துறையிலிருந்து புத்தளம், கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் சாதாரண முதல் மிதமான அலையுடன் காணப்படும். இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

(வளிமண்டலவியல் திணைக்களம்)